சுருக்கம்

பணியமைப்பு - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - திருமதி M.பாமா, க/பெ.காலஞ்சென்ற திரு S.பாஸ்கரன் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பொதுப்பணித்(பி1) துறை

அரசாணை (2ப) எண்.15

நாள் : 30.06.2022
சுபகிருது, ஆனி - 16,
திருவள்ளுவர் ஆண்டு, 2053

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் கடிதம் எண். எஸ்1(2)/1621/2020 (5032), நாள் 09.09.2021.
3. முதன்மைத் தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் (பொது) மற்றும் தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை அவர்களின் கடிதம் எண். எஸ்3(3)/019529/2022, நாள் 02.05.2022.

-----

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித் துறையைச் சார்ந்த திருச்சி மண்டலத்தைச் சார்ந்த சிறப்பு திட்ட உபகோட்டம்-2, உளுந்தூர்பேட்டை அலுவலகத்தில் உதவிப் பொறியாளராகப் பணிபுரிந்து வந்த திரு S.பாஸ்கரன் கடந்த 01.02.2014 அன்று பணியில் இருக்கும் போது காலமானதைத் தொடர்ந்து, தனியரது மனைவி திருமதி M.பாமா என்பவருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு தனியர் திருப்பூர் மின் உபகோட்ட அலுவலகத்தில் 09.03.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியரின் பிறந்த நாள் 20.03.1979 என்றும், தனியர் பணியில் சேர்ந்த நாளில் வயது 40 வருடங்கள், 11 மாதம் 19 நாள் என்றும், தனியரின் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 09.03.2020 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கும்படி தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும், திருமதி M.பாமா பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 09.03.2020 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணி வரன்முறை செய்வதால் தனியர் ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.எண்.9441/ட்டி.1/2022, நாள் 24.05.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அ.சா.எண்.2498999/ஜி.1/2022, நாள் 23.06.2022-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தயானந்த் கட்டாரியா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>:-

முதன்மைத் தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் (பொது) மற்றும் தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை - 5.
திருமதி M.பாமா, இளநிலை உதவியாளர்.
(முதன்மைத் தலைமைப் பொறியாளர் தலைமைப் பொறியாளர் (பொது) மற்றும் தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை - 5 வழி)

<u>நகல்</u>:-

மாநில கணக்காயர், சென்னை - 18.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை - 9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/7/22

பிரிவு அலுவலர்

4.7.22